Page I

## 2-வது உலகத்தமிழர் பாதுகாப்பு மாநாடு:தீர்மானங்கள்

## கோலாலம்பூர் 28-12-2012

**தலைமை :புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் க.கிருஷ்ணசாமி MD.M.L.A.,**

**:பினாங்கு துணை முதல்வர் பேராசிரியர் பா.ராமசாமி**

மலேசியா தலைநகர் கோலாலம்பூர் -பெட்டாலிங் ஜெயாவிலுள்ள தோட்ட மாளிகையில் 2-வது உலகத்தமிழர் பாதுகாப்பு மாநாடு தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர் புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் க.கிருஷ்ணசாமி எம்.டி மற்றும் பினாங்கு துணை முதல்வர் பேராசிரியர் பா.ராமசாமி ஆகியோர் தலைமையில் 2012ம் ஆண்டு டிசம்பர் 28ம் தேதி நடைபெற்றது.இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின் வருமாறு:-

1) இந்தியா,இலங்கை,இங்கிலாந்து,பிரான்ஸ்,ஆஸ்திரேலியா,நார்வே,பர்மா,மலேசியா உட்பட உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து 2-வது உலகத்தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் கலந்து சிறப்புரையாற்றிய நாடாளுமன்ற,சட்டமன்ற உறுப்பினர்கள்,இலங்கைதமிழ் நாடாளுமன்ற தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள், நாடு கடந்த தமிழ்ஈழ அரசாங்க பிரதிநிதிகள்,பிரிட்டிஷ் தமிழர்பேரவை,உலகத்தமிழீழப் பாதுகாப்புப் பேரவை தமிழக மற்றும் மலேசியத் தமிழ் ஆர்வலர்கள் உட்பட பல்வேறு அமைப்புகளின்பிரதிநிதிகளுக்கும் இம்மாநாடு நன்றியைத் தெரிவித்து கொள்கின்றது.
2) தமிழகத்தில் 2010ம் ஆண்டு கோவை மாநகரில் முதல் உலகத் தமிழர் பாதுகாப்பு மாநாட்டை வெற்றிகரமாக நடத்தியும் இரண்டாவது மாநாட்டை கோலாலம்பூரில் நடத்திட முன்முயற்சி எடுத்திட்ட புதிய தமிழகம் கட்சி தலைவர் டாக்டர் க.கிருஷ்ணசாமி அவர்களுக்கும் இம்மாநாடு வெற்றிகரமாக அமைய உற்றதுணையாக விளங்கிய பினாங்கு துணை முதல்வர் பேராசிரியர் பா.ராமசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் குலசேகரன், சாமுவேல்ராஜ் பொன்ரங்கன், மைக்கேல்தமிழரசன், கேஷ்விந்தர்சிங், கலையரசு,சுரேஷ்குமார், கண்ணா உட்பட அனைத்து தமிழ் பேராளர்களுக்கும் இம்மாநாடு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.
3) இனவெறி இலங்கை அரசுக்கு எதிராக கடந்தாண்டு வந்த ஐ.நா. மனித உரிமைக் கவுன்சில் தீர்மானத்தில் நடுநிலை வகித்த மலேசிய அரசின் செயல்பாடு உலகத்தமிழர்களுக்கு பெருமிதம் அளிக்கின்றது.அதே வேளையில் 2013 ம் ஆண்டு மார்ச் முதல் வாரத்தில் நடைபெறவுள்ள ஐ.நாவின் மனித உரிமைக்கான கவுன்சில் கூட்டத்தில் இனவெறி இலங்கை அரசு மீது ஐக்கிய நாடுகளின் சுதந்திரமான விசாரணை ஆணையம் நிறுவிட

Page 11

மலேசிய அரசு நேரிடையாக ஆதரவு தர இம்மாநாடு வேண்டி விரும்பி கேட்டு கொள்கிறது.

4) சர்வதேச அளவில் அணிசேரா நாடுகளின் கூட்டமைப்பில் அங்கம், பாலஸ்த்தீனத்தில் PLOக்கு ஆதரவு, தென்னாப்பிரிக்காவில் நிறவெறிக்கு எதிரான முற்போக்கு நடவடிக்கை எடுத்த இந்திய அரசு இனவெறிக் கொள்கையோடு ஈழத்தமிழ் மக்களுடைய வாழ்வுரிமை, மண்ணுரிமை, மனித உரிமையைப் பறித்த இலங்கை அரசுக்கு இந்திய அரசின் ஆதரவான நிலைப்பாட்டின் விளைவாக ஈழத்தமிழினம் பேரழிவுக்கு ஆட்பட்டது. இதன் காரணமாக பத்து கோடி தமிழ் மக்களிடமிருந்து இந்திய நடுவணரசு பெரிதும் அன்னியப்பட்டிருக்கிறது. இத்தீராப் பழியைத் துடைத்து எறியும் பொருட்டு வரும் மார்ச் மாதத்தில் நடைபெறும் மனித உரிமைக்கான ஐ.நா.கூட்டத்தில் இனவெறி இலங்கை அரசுக்கு எதிராக சுதந்திர விசாரணை ஆணையம் ஒன்றை நிறுவிட இந்திய அரசு முன்முயற்சி எடுக்க வேண்டுமென இம்மாநாடு வலியுறுத்துகின்றது.

5) ஈழத்தமிழர் தேசிய இனம் (Nationality) முழுமையான சுயநிர்ணய உரிமையும் தனது பாரம்பரியத் தாயகத்தில் இறையாண்மையும் கொண்ட தனித்துவமான தேசம் (Nation) ஆகும்.

6) இந்த தேசம் சிங்கள தேசத்தால் 60 ஆண்டுகளுக்கு மேலாக இன அழிப்புக்கு (Genocide) உள்ளாக்கப்பட்டு வந்திருக்கிறது.

7) ஈழத்தமிழர்களின் வரலாற்றுவழிவந்த இறையாண்மை (Historical Sovereignity), 60 வருடங்களாக போராடிப்பெற்ற இறையாண்மை (Earned Sovereignity), என்பனவற்றுடன்,ஈழத்தமிழர் தேசம் மீதான இன அழிப்பில் இருந்து அதைப் பாதுகாப்பதிற்கு உலகத்தால் வழங்கப்பட வேண்டிய இறையாண்மை (Remedial Sovereignity) என்று மூன்று இறையாண்மைகளின் அடிப்படையிலான ஈழத்தமிழரின் அரசியல் விளங்கிக்கொள்ளப்படவேணடும் என்பதை இந்த மாநாடு அங்கீகிரிக்கிறது.

8) ஈழத்தமிழ் மக்களின் மீதான மனித உரிமை மீறல், போர் விதிமுறை மீறல்,இனப்படுகொலை ஆகியவற்றை சர்வதேச மக்கள் மற்றும் 'அரசுகள்' மத்தியலும் எடுத்து செல்ல ஒரு உயர் மட்ட குழு டாக்டர்.க.கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் அமைக்கப்படுகின்றது.

9) உலகின் மூலை முடுக்கெல்லாம் பரவிக்கிடக்க கூடிய தமிழினம் பல தேசங்களில் தன்னுடைய மொழி மற்றும் இன அடையாளங்களை இழந்து வாழ்கின்றது இம்மக்களை அடையாளங்கண்டு ஒருங்கிணைக்கவும் அவர்களுக்குரிய பாதுகாப்பு அளிக்கவும் நிரந்தரமாக செயல்படும் "உலகத்தமிழர் பாதுகாப்பு மையம்" ஒன்றை தமிழகத்தில் நிறுவிட இம்மாநாட்டில் முடிவெடுக்கப்படுகின்றது

10) தமிழர்கள் மொழி இன அடிப்படையில் ஓரணியில் திரள தடைக்கற்களாக இருக்கும் தீண்டாமை உணர்வுகளையும், ஜாதி வேறுபாடுகளையும் அறவே

வெறுத்திடவும் அரசியல் காரணங்களுக்காக் தமிழ் மக்களிடையே சாதிய வேறுபாடுகளைத் தூபம் இட்டு வளர்க்க எண்ணும் மூன்றாம் நிலை அரசியல்வாதிகளை அடையாளம் கண்டு வெறுத்தொதுக்கவது உலகத்தமிழ்பாதுகாப்பு மாநாடு வலியுறுத்துகின்றது.

11) தமிழத்தினுடைய நெடுநாளைய பிரச்சனையாக நீடித்து வரும் காவேரி,பாலாறு,முல்லைப் பெரியாறு பிரச்சனைகளில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டும் பொருட்டு அண்டை மாநிலங்களுடன் எல்லை மறுசீரமைப்பு பணியை மேற்கொள்ள இந்திய அரசை இம்மாநாடு வலியுறுத்துகிறது

12) மொழி மற்றும் இன அடிப்படையில் தமிழர்கள் அடையாளப்படுத்தும் பொருட்டு பள்ளி மற்றும் கல்லூரிகளில் குழந்தைகளை அனுமதிக்கும் பொழுது சாதி, இன, மதம் ஆகிய மூன்று பிரிவுகளுக்கான கேள்விகளில் “தமிழர்” என்று மட்டுமே அடையாளப்படுத்த இம்மாநாடு வலியுறுத்துகிறது.

13) லண்டனில் நவம்பர் 7,8,9 ஆகிய தேதிகளில் நடைபெற்ற மாநாட்டின் தீர்மானத்தை மக்கள் இயக்கமாக மாற்றவும் ஜனவரி 1ம் தேதி முதல் மார்ச் முதல் வாரம் வரை உலகெங்கும் ஆர்ப்பாட்டங்கள் உண்ணாவிரதங்கள் நடத்துவது என முடிவு செய்யப்படுகிறது. சென்னையில் பிப்ரவரி 23ம் தேதி மாபெரும் பேரணி நடத்த முடிவு செய்யப்படுகிறது.

14) 2009ம் ஆண்டு போருக்கு பின்னர் ஈழத்தில் இலங்கை மற்றும் பிற நாடுகளின் இராணுவம் மற்றும் சிங்களரால் குடியேற்றப்பட்ட அனைத்து தமிழ் மக்களுடைய நிலங்களிலிருந்தும் இராணுவம் உடனடியாக வெளியேற்றப்பட வேண்டும்.

15) தமிழ் மக்களுடைய நிலங்களை அம்மக்களிடம் உடனடியாக ஒப்படைக்க வேண்டும்

16) கடந்த ஆண்டு ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் எந்த குறைந்தபட்ச நடவடிக்கையும் எடுக்காத இலங்கை அரசு மீது ஐ.நா கடும் நடவடிக்கை எடுக்க இம்மாநாடு வலியறுத்துகிறது.

17) ஐ.நாவின் R2P ன் விதிகளின்படி ஈழத்தமிழ் மக்கள் தங்கள் மண்ணில் உரிய பாதுகாப்புடன் வாழ உரிய நடவடிக்கை எடுக்க உலக நாடுகளை இம்மாநாடு வலியுறுத்துகின்றது.

18) ஈழத்தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை குறித்து புலம்பெயர்ந்து வாழும் அனைத்து ஈழத்தமிழ் மக்கள் உட்பட வடகிழக்கு மாகாணங்களில் பொது வாக்கெடுப்பு நடத்த இம்மாநாடு வலியுறுத்துகின்றது.

19) மாவீரர் தினத்தன்று யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் தீபங்களை ஏந்தி தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தியதற்காக அப்பல்கலைகழகத்திற்குள் இராணுவம் நுழைந்து மாணவ மாணவியரைப் பயங்கரவாத சட்டங்களின்படி கைது செய்துள்ள இலங்கை அரசின் ஜனநாயக விதிமீறல் நடவடிக்கையை

இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கின்றது. அவர்களை உடனடியாக விடுதலை செய்யக் கோருகிறது.

20) ஊடகங்களாலும் பல்வேறு அமைப்புகளாலும் தமிழர்களை Tamil's என ஆங்கிலத்தில் அழைக்கப்படுவதைத் தவிர்த்து "தமிழர்கள்" என அடையாளப்படுத்த இம்மாநாடு வலியுறுத்துகிறது.

21) தமிழகத்தில் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களும் ஆட்சி அதிகாரத்தின் முதன்மை பீடத்தைப் பிடிக்க முடிகிறது.பிற அதிகார மட்டங்களிலும் பெரும் பங்கு வகிக்க முடிகின்றது. ஆனால் இந்திய நாட்டுக்குள்ளேயே பிற மாநிலங்களின் தமிழர்கள் பெருமளவு இருந்தும் அவர்கள் மூன்றாம் நிலை மனிதர்களாக நடத்தப்படுகிறார்கள் இதே போன்று நாடு கடந்து பல தேசங்களில் வாழ்கின்ற தமிழ் மக்கள் பல நூற்றாண்டுகள் தங்களின் வியர்வையையும், இரத்தத்தையும் சிந்தி அந்நாடுகளின் மேன்மைக்கு தங்களை முழுமையாக அர்ப்பணித்துள்ளனர் எனவே தமிழர்களும் அவர் சந்ததியினரும் அதிகார மையங்களில் எந்த விதமான பங்களிப்பும் அளிக்கப்படாமல் ஒதுக்கப்படும் நிலையே மலேசியா, பர்மா, இந்தோநேசியா, சிங்கப்பூர், தென்ஆப்பிரிக்கா, பிஜிதீவு போன்ற பல தேசங்களில் இன்றும் நீடிக்கின்றன. எனவே தமிழகத்தில் தமிழ்மொழியைத் தாய்மொழியாக கொண்ட தமிழர்களே ஆட்சி அதிகாரத்திற்கு வரவும் பிற மாநிலங்களில் தமிழ் மக்களுடைய மக்கள் தொகைக்கு ஏற்ப மக்கள் பிரதிநிதித்துவமும் அமைச்சரவையிலும் நிர்வாகத்திலும் உரிய பங்கு பெறவும் இதே போன்று உலகின் பிற நாடுகளிலும் அந்தந்த நாடுகளில் உள்ள தமிழ் மக்கள் தொகைக்கேற்ப ஜனநாயகத்தின் அனைத்து அமைப்புகளிலும் பங்களிக்கப்பட வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகின்றது. "அதிகாரத்தில் உரிய பங்கு" எனும் தாரக மந்திரத்தை அந்தந்த நாடுகளில் வாழும் தமிழர் அமைப்புகள் தொடர்ந்து வலியுறுத்த வேண்டும் என இம்மாநாடு கேட்டுக்கொள்கின்றது.

22) உலகத்தமிழ் மக்களிடையே நிலவும் வறுமை, கல்லாமை, பிணி ஆகியவற்றை அறவே நீக்கும் பொருட்டு கல்வி, தொழில் மற்றும் வணிகத்தை வளர்க்க உலகத்தமிழரிடையே தொடர் உறவுகளை மேம்படுத்த வேண்டும் என இம்மாநாடு வலியுறுத்துகிறது.

**கையொப்பம்**

**டாக்டர்.க.கிருஷ்ணசாமி MD.MLA.,**

**மாநாட்டு அமைப்பாளர்**